**SL. No. : DD**

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 64 ]
Total No. of Questions : 64 ]

**CCE PF**
**CCE PR**

[ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 8
Total No. of Printed Pages : 8

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T** **Code No. : 10-T**

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು
# Subject : First Language — TAMIL
**( ಹೊಸ ಪಠ್ಯಕ್ರಮ / New Syllabus )**

**( ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ & ಪುನರಾವರ್ತಿತ ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / Private Fresh & Private Repeater )**

ದಿನಾಂಕ : 23. 03. 2018 ] [ Date : 23. 03. 2018

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 9-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ–12-45 ರವರೆಗೆ ] [ Time : 9-30 A.M. to 12-45 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 125 ] [ Max. Marks : 125

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் புறவய மற்றும் அகவய வகை (Objective and Subjective) வினாக்கள் 64-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது (Sealed by reverse jacket). நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும்பொழுது அதனை வெட்டி எடுத்து பிரிக்க வேண்டும். வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும், பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. மாணாக்கர்கள் தங்களது விடைகளை முடிந்தவரை தங்களது சொந்த நடையில் எழுத வேண்டும்.
4. வலது கைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணாக்கர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**Tear here**

## பகுதி அ

I. ஒரு தொடரில் விடை தருக : 16 × 1 = 16

1. சொந்தமில்லாதவர் வந்தவர் ஆள நாம் யாது செய்திருந்தோம் என்கிறார் நாமக்கல் கவிஞர் ?
2. இளையான்குடி மாறர் கறிக்காக எதனைப் பறித்தார் ?
3. பெண்கள் எவை போயின என்று கும்மியடித்தனர் ?
4. காளைகளுக்குச் சொல்வது போல் மக்களுக்குப் பட்டுக்கோட்டையார் கூறுவது என்ன ?
5. வள்ளுவர் கூறும் புலவர் இயல்பு யாது ?
6. திரு. வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?
7. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இரு வகையினர் யாவர் ?
8. இன்றைய இளைஞன் எவற்றை இடறிவிட வேண்டும் ?
9. இலங்காவித் தீவுகள் எந்த நாட்டின் ஒரு பகுதி ?
10. பம்ப பாரதத்திற்குப் பம்பன் இட்ட பெயர் யாது ?
11. தமிழர்களைப் பழித்த வடவரசர்களைக் குறிப்பிடுக.
12. தம் மக்களது கைபட்ட உணவு எப்படிப்பட்டது ?
13. மதுரைச் சொக்கநாதன் மண்ணைச் சுமந்ததன் காரணம் என்ன ?
14. மனிதன் செய்த தவறாக தென்கச்சி சுவாமிநாதன் எதனைக் குறிப்பிடுகிறார் ?
15. விடுகதை என்றால் என்ன ?
16. உரிச்சொல் என்றால் என்ன ?

II. பின்வரும் வினாக்களுக்கு மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 16 × 2 = 32

17. தனக்கு வரும் தீமையைப் பிற்பக லேயே அடைபவன் யார் ? விளக்குக.
18. தலைவி உணவு சமைக்க மேற்கொண்ட செயல்பாட்டினைக் கூறுக.
19. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

20. சேக்ஸ்பியர் உரையாடல் எவ்வாறு இருக்க வேண்டும் என்கிறார் ?

21. நீதிசாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

22. தீப்பெட்டி ஆபிஸில் இருந்து திரும்பிய பஸ்கள் எவ்வாறு குழந்தைகளை வெளியே தள்ளின ?

23. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

24. செய்யுளின் உறுப்புகள் யாவை ?

25. வெட்சி என்றால் என்ன ?

26. உமறு புலவர் நதியின் பெருக்கெடுப்பு பறறிக் கூறுவன யாவை ?

27. நாய் மற்றும் பாம்பின் இயல்புகளாக ஆசிரியர் கூறுவன யாவை ?

28. யந்திர மனிதர்களால் உண்டாகும் தீமைகள் யாவை ?

29. இறந்த காலம் பற்றி வைரமுத்து கூறுவது யாது ?

30. தமிழ் விடுகதைகளை வெளியிட்டு ஊக்குவித்த இதழ்கள் நான்கினைக் குறிப்பிடுக.

31. சொற்பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ?

32. அடுக்குத் தொடர் என்றால் என்ன ?

III. பின்வரும் வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : $11 \times 3 = 33$

33. புதரில் விதைத்த வித்து போன்றவை எவை ?

34. அனுமன் கையி ருந்த மோதிரத்தை வாங்கியதும் சீதை அடைந்த நிலை யாது ?

35. இளைஞன் எப்போது பாறையில் மோதிய பந்தாய் திரும்பி வர நேரிடும் ?

36. பூமியின் வெப்பம் அதிகரிப்பதால் ஏற்படும் பாதக விளைவுகளை எழுதுக.

37. இரட்டுற மொழிதல் என்றால் என்ன ?

38. நாமக்கல் கவிஞர் என்னுடைய நாடு என்ற கவிதையில் கூறும் கருத்துகள் குறித்து எழுதுக.

39. பாரதிதாசன் கடுகு உள்ளம் கொண்டவர் என்று யாரைக் குறிப்பிடுகிறார் ?

இடம் சுட்டிப் பொருள் விளக்குக :

40. “பட்டினிகிட பலாவையே உண்பது என்று”

41. “தெருக்களில் பாண்டி விளையாடக் கூட ஒரு பெண்பிள்ளையைக் காணோம்”

42. “சரி, ... பூமி கோபப்படற அளவுக்கு மனுஷன் பண்ணின தவறுதான் என்ன ?”

43. “எம் தமிழ்ப்பாவையைச் சுமந்து செல்லுங்கள்”

IV. பின்வரும் வினாவுக்கு எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக: $3 \times 4 = 12$

44. இளையான்குடி மாறர் மனைவி சிவனடியார்க்கு அமுது படைக்க மேற்கொண்ட செயல்களை விளக்குக.

*அல்லது*

அறன் வ யுறுத்தல் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளை விளக்குக.

45. சேதுப்பிள்ளையவர்கள் இவர்கள் கைவண்ணம் இங்குக் கண்டோம் என்னும் தொடரை நினைவூட்டும் நிகழ்ச்சியினை விவரிக்கவும்.

*அல்லது*

இலட்சியம் குறித்து வைரமுத்து கூறும் கருத்துகள் யாவை ?

46. செங்குட்டுவன் கண்ணகிக்குக் கட்டிய கோயிலைக் கண்டு வியந்ததை விளக்குக.

*அல்லது*

தீப்பெட்டி ஆபிஸிற்குச் சென்று வரும் குழந்தைகள் பற்றி கி. ராஜநாராயணன் கூறுவன யாவை ?

V. அடிபிறழாமல் எழுதுக : $1 \times 4 = 4$

47. “இந்திய நாடிது .....” என வரும் பாடல்.

*அல்லது*

“இனிமைத் தமிழ் மொழி ...” என வரும் பாடல்.

VI. 48. பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக : 4 × 1 = 4

அமெரிக்காவின் மினி இந்தியா ஹூஸ்டன். இது ஆஸ்டினி ருந்து 156 மைல் தூரமுள்ளது. அங்கே சுமார் 20,000 இந்தியர்கள் வாழ்கிறார்கள். இதில் பெரும்பாலோர் ஹூஸ்டனில் ஒரே பகுதியில் வாழ்கின்றனர். அதனால் அது ஒரு சிறிய இந்தியாவாகவே காட்சியளிக்கிறது. ஒரு சில இந்திய உணவகங்களில் இட் , மசால்தோசை, வடை முதற்கொண்டு அனைத்தும் கிடைக்கின்றன. நம் ஊரைப் போலவே, புடவைக் கடைகளும், நகைக் கடைகளும் இருக்கின்றன. இந்தியரால் நடத்தப்படும் பலசரக்குக் கடைகளும் உள்ளன. ஹூஸ்டனில் இந்தியாவில் இருக்கும் ஓர் உணர்வை நாம் பெறலாம்.

வினாக்கள்:

i) அமெரிக்காவின் மினி இந்தியா எது ?

ii) இந்திய உணவகங்களில் கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை ?

iii) ஹூஸ்டனில் வாழும் இந்தியர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

iv) ஹூஸ்டனுக்கு செல்பவர் பெறும் உணர்வு யாது ?

## பகுதி ஆ

VII. பின்வரும் வினாக்கள் / மற்றும் முழுமை பெறாத கூற்றுகளுக்கு நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்றே ஒன்று சரியானது அல்லது பொருத்தமானது. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அவ்விடையினை விடைக் குறியீட்டு எழுத்துடன் முழுவதுமாக எழுத வேண்டும். 10 × 1 = 10

49. நான்கு சீர்களைக் கொண்டது ........................................ .

(A) அளவடி (B) நெடிலடி

(C) சிந்தடி (D) குறளடி.

50. “போ, போ” என்பது ........................................ .

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத் தொடர்

(C) வேற்றுமை (D) அணி.

51. ஆசிரியப்பாவின் ஓசை .................................. .

(A) செப்பலோசை (B) இரவலோசை

(C) பரவலோசை (D) அகவலோசை.

52. அறிவின் மறுபெயர், இரவில் வருவது அது என்ன ?

(A) இருள் (B) மதி

(C) பகல் (D) மரம்.

53. பாமர மக்களின் பழமை மொழி ................................ .

(A) அணி (B) பாவகை

(C) பழமொழி (D) தொடை.

54. அழகு அழகாய்ப் பூப்பூக்கும்

அம்மாடி என்று காய் காய்க்கும்

- இதில் அமைந்துள்ள தொடை ........................................... .

(A) மோனை (B) முரண்

(C) அந்தாதி (D) எதுகை.

55. "மனுஷங்கிட்டேயிருந்து பூமியைக் காப்பாத்தறது எப்படி ?" இது ........................................... .

(A) வினாத் தொடர் (B) வியப்புத் தொடர்

(C) இயல்புத் தொடர் (D) தொகைத் தொடர்.

56. "வகுப்பு சிரித்தது" இது ........................................... .

(A) பொருளாகுபெயர் (B) இடவாகு பெயர்

(C) பண்பாகு பெயர் (D) தொழிலாகு பெயர்.

57. மலையும் மலை சார்ந்த இடமும் ........................................... .

(A) முல்லை (B) நெய்தல்

(C) மருதம் (D) குறிஞ்சி.

58. 'வெப்சைட்' - என்பதன் தமிழாக்கம் ........................................... .

(A) வலைத்தளம் (B) தொலைபேசி

(C) செல்பேசி (D) மின் அஞ்சல்.

VIII. தொடர்புபடுத்தி எழுதுக: $4 \times 1 = 4$

59. தீதீதீ : அடுக்குத் தொடர்

தரதர : ................................................... .

60. உயிர் எழுத்துகள் நீண்டு ஒ ப்பது : உயிரளபெடை

ஒற்றெழுத்துகள் நீண்டு ஒ ப்பது : ................................ .

61. பாரதியார் : தமிழ்க் கவிஞர்

பம்பன் : ................................................. .

62. செய்யுளைப் பொருளால் அழகு செய்வது : பொருளணி

செய்யுளைச் சொல்லால் அழகு செய்வது : ........................................... .

## பகுதி இ

IX. 63. நீவிர் வாழும் பகுதியில் உள்ள சாலையின் நிலைமை குறித்து தகுந்த தலைப்புடன் 'தினமலர்' நாளிதழுக்கான செய்திக் குறிப்பு எழுதுக. $1 \times 5 = 5$

*அல்லது*

உம் ஊரில் நடைபெறும் சல் க்கட்டு விழாவைக் காண வருமாறு உன் நண்பனுக்கு / தோழிக்கு மடல் ஒன்று எழுதுக.

X. 64. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்று குறித்து கட்டுரை எழுதுக: $1 \times 5 = 5$

அ. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ஆ. கைபேசியின் பயன்கள்

இ. தமிழ் மொழியின் சிறப்புகள்.